சென்னை ரீட்டாமேரி கற்பழிப்பு விவகாரம்:

# திண்டிவனம் போலீஸ் அதிகாரிகளை கைது செய்யக்கோரி செஞ்சியில் பேரணி

## சி.பி.ஐ. விசாரணைக்கும் உத்தரவிடவேண்டும்

செஞ்சி, டிச. 3-

சென்னையைச் சேர்ந்த ரீட்டா மேரி கற்பழிப்பு தொடர்பாக திண்டிவனம் போலீஸ் அதிகாரிகளை கைது செய்ய வேண்டும் மற்றும் இது தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட கோரி செஞ்சியில் பேரணி நடந்தது.

**பேரணி**

செஞ்சி கிளைச் சிறையில் நீதிமன்ற காவலில் வைக்கப் பட்ட சென்னையைச் சேர்ந்த ரீட்டாமேரி கற்பழிக்கப் பட்டது தொடர்பாக செஞ்சியில் அம் பேத்கர் முற்போக்கு இளை ஞர் இயக்கம் மற்றும் பொது மக்கள் சார்பில் பேரணி நடந்தது. செஞ்சி மாதா கோவில் அருகே புறப்பட்ட பேரணி கடைவீதி வழியாக கூட்டுரோட் டில்முடி வடைந்தது. பேரணியை அந் தோணிமேரி தொடங்கி வைத் தார். லூர்து சேவியர் தலைமை தாங்கினார்.

**கோரிக்கைகள்**

பேரணியின்போது ரீட்டா மேரியை கடத்தி விற்ற ஆத்தூர் போலீஸ்காரர் முருகேசன், ரீட்டாவை விபசாரத்தில் ஈடு படுத்திய சாந்தி, அவர் மீது பொய் வழக்கு போட்ட திண்டி வனம் போலீஸ் அதிகாரிகள் ராஜ் குமார், முகமதுநசிர் மற்றும் ராஜேந்திரன், சிறையில் கற்பழித்ததாக கூறப்படும் சிறைக் காவலர்களையும் உடனே கைது செய்யவேண்டும். இது தொடர்பாக சி.பி.ஐ. விசார ணைக்கு உத்திரவிடவேண்டும், பாதிக்கப்பட்ட ரீட்டாமேரிக்கு நிவாரணமாக ரூ. 2 லட்சம் தரவேண்டும். அவருக்கு அரசு வேலை தரவேண்டும்,

தவிர இவரை காற்ற முயன்ற சென்னை இளைஞர்க ளுக்கு தலா 50 ஆயிரம் வழங்க வேண்டும் உள்பட 5 கோரிக் கைகள் வலி யுறுத்தப்பட்டு இந்த பேரணியில் 500 பெண்கள் கலந்து கொண் டனர்.

**கூட்டம்**

இதைதொடர்ந்து பின்னர் விழுப்புரம் சாலையில் நடந்த கண்டன பொதுக்கூட்டத்திற்கு வக்கில் கோதண்டம் தலைமை தாங்கி னார். செஞ்சி லாரன்ஸ் வரவேற் றார்.

ரமேஷ்நாதன், தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த சாந்தி, லெனின், மதுரை சுரேஷ் உள்பட பலர் கலந்துகொண்டு பேசினர்.

# ஆத்தூர் விபசார விடுதி தலைவி ஈஸ்வரி சேலத்தில் கைது

## ரீட்டா விவகாரத்தில் திருப்பம்

சேலம், ஜன. 31—

பலவந்தப்படுத்தி விப சார படுகுழியில் தள்ளப் பட்ட சென்னை திருவொற் றியூர் ரீட்டா விவகாரத்தில், தலைமறைவாக இருந்த ஆத்தூர் விபசார விடுதி தலைவி ஈஸ்வரியை சி.பி.சி.ஐ.டி., போலீசார், சேலத்தில் நேற்று கைது செய்தனர்.



ரீட்டா

திருவொற்றியூரை சேர்ந்த சமுக சேவகி லீலாவதி. இவ ரது மகள் ரீட்டா. குடும்ப பிரச்னை காரணமாக வீட்டிலிருந்து வெளி யேறிய ரீட்டா ஈரோடு சென்றார். அங்கு ஆனந்தன் என்பவர் ரீட்டா விடம் நம்பகமாக பேசி ஆத்தூரைச் சேர்ந்த ஈஸ்வரி என்ற விபசார விடுதித் தலைவியிடம் ஒப்படைத்தார். அங்கு, ஆத்தூர் போலீஸ் ஸ்டேஷனில் எழுத்து வேலை செய்யும் முருகேசன், தனது நண்பர்களுடன், ரீட்டாவை பலவந்தப்படுத்தி கற்பழித் துள்ளார்.

பின்னர் ரீட்டாவை முருகேசனும் அவனது நண்பர்களும் திண்டி வனம் ஜே.கே., பகுதியில் உள்ள விபசார விடுதியில் ரூ.7 ஆயிரத்து 500க்கு விற்று விட்டு மீண்டும் ஆத்தூர் சென்று விட்டனர்.

திண்டிவனம் விபசார விடுதியில் இருந்து ரீட்டா கைது செய்யப் பட்டு செஞ்சி கிளைச் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார். செஞ்சி கிளைச்சிறையிலும் சிறைக் காவலர்களால் ரீட்டா பல வந்தப்படுத்தப்பட்டார். அதற்கு பின் தான் ரீட்டா வுக்கு நேர்ந்த விபரீதம் வெளிச்சத்துக்கு வந்தது. ரீட்டா விவகாரத்தை வெளிக்கொண்டு வந்த வக்கீல் லூர்து சேவியர், தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்ட பின் தான் அவசர கதியில் விழுப் புரம் போலீசார் விசாரணையை தொடங்கினர். விபசார படுகுழியில் ரீட்டாவை தள்ளிய ஆத்தூர் விப சார விடுதி தலைவி ஈஸ்வரி தலைம றைவானார். அவரை சி.பி.சி.ஐ.டி., போலீசார் தேடி வந்தனர்.

இந்நிலையில், சேலம் கொண்ட லாம்பட்டி பஸ் ஸ்டாப்பில் நின்றுக் கொண்டிருந்த ஈஸ்வரியை சி.பி.சி.ஐ.டி., போலீசார் நேற்று கைது செய்தனர். அவரிடம் விசா ரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்த விசாரணையில், ஆத்தூரில் நடந்து வரும் விப சாரம், விபசார பெண்கள் பரிவர்த் தனை உட்பட ரீட்டா வழக்கு தொடர்பாக பல்வேறு திடுக் தக வல்கள் வெளிவரலாம் என சி.பி.சி.ஐ.டி., போலீசார் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

# பொடோ சட்டம் தேவைதானா? விழுப்புரத்தில் கருத்தரங்கம்

விழுப்புரம், ஜன.29-

ஜனநாயக அடிப்படை உரிமைகளை பறிக்கும், பொடோ சட்டத்தை எதிர்த்து திண்டிவனத்தில் அண்மை யில் அ.இ. வழக்கறிஞர் சங்கத் தலைவர் அ. கோதண்டம் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது.

இதில் வழக்கறிஞர்கள் எஸ். மார்ட்டின், ஆர். ராம மூர்த்தி (சிபிஎம்), கே. கஜேந்திரவரதன் (சிபிஎம்), எஸ். லூர்துசேவியர் (அம்பேத் கர் முற்போக்கு இளைஞர் இயக்கம்), டி.ஏ.எஸ். பாலன், எஸ். லாரன்ஸ், பேராசிரியர் சரஸ்வதி (பி.யு.சி.எல்), எஸ். சுரேஷ் மோகன் (சி.பி.ஐ), வி.எ. ரமேஷ்நாதன் (தலித் விடுதலைக்கான மனித உரிமை அமைப்பு), ஹென்றி திபேன் (மக்கள் கண்காணிப் பகம் - மதுரை), எஸ். ரூபன் சாந்த மூர்த்தி (இயக்குநர், தலித் வாரியம் சி.எஸ்.ஐ. - வேலூர்), பி. அரசாங்கு (சி.பி. எம்) ஆகியோர் கலந்து கொண்டனர் □